[1974 மார்ச் 11

இணைப்பு I—தொடர்ச்சி.

16. சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2.

17. மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, சென்னை-3.

18. லேடி சிவசாமி ஐயர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மைலாப்பூர், சென்னை-4.

19. மாதிரி உயர்நிலைப்ப ள்ளி, சைதாப்பேட்டை,

இணைப்பு II.

[15-ம் பக்கத்தில் 359 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினு விற்குரிய விடையைக் காண்க.]

மீனளத் துறையின் தலையாய குறிக்கோள், வளர்ச்சி பெற்று வருகின்ற, வளர்ச்சியடைந்த, மற்ற நாடுகளுக்கு இணையாக, அறிவியல் வழிகளில், மீன்பிடி தொழிலைக் காலத்துக்கேற்ப மாற்றியமைப்பதே ஆகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கிய நாட்களிலிருந்தே இத் தொழிலைத் தற்காலத்துக்கேற்ப மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் தொடங்கின. இத்துறையின் முதலீட்டில் பெரும்பான்மையும் மீன்பிடி விசைப்படகுகளைப் புழக்கத்திற்குக் கொண்டு வருதல் ; இன்றைநாள் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப மீன் குஞ்சுகளை வளர்த்தல், நீர் நிலைகளில் பெருமளவில் மீன்களைப் பெருகச் செய்தல்) மீனளத்தின் பல்வேறு கூறுகள் மீன்பிடி தொழிலின் பிரச்னைகள் ஆகியவைப்பற்றி ஆராய்ச்சி நடத்துதல் போன்ற, இத் தொழிலைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும் பணிகளுக்கே செலவிடப்படுள்ளது. இத் தொழிலைத் தற்காலத்துக்கேற்ப மாற்றியமைப்பதற்கு முக்கியத்துவம் அளித்துள்ள திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. மீன்பிடி விசைப்படகுகளைப் பயன்படுத்துதல் :

2. புதிய “ கியர்களைப் (Gear) ” புகுத்துதல் ;

3. இயந்திரங்களின் உதவியால் மீன் பிடித்தல், புதிய “ கியர் ” களை யும், அறிவியல் சாதனங்களையும் பயன்படுத்துதல் ஆகியவற்றை மீன வர்கள் கற்றுக்கொள்ள அவர்களுக்குப் பயிற்சியளித்தல் ;

4. மீன்குஞ்சுகளை வளர்த்தல், நீர் நிலைகளில் மீன்களைப் பெருகச் செய்தல் ;

5. மீனைப் பதப்படுத்துவதும் விற்பனையும்.

1974 மார்ச் 11]

இத்துறையால் செயற்படுத்தப்படுகின்ற பிற திட்டங்கள் இவற்றுக்குத் துணையாக அமைவன ஆகும். அவையும், பின் வருவனவற்றைச் செய்யும் பொருட்டு, மீன் பிடி தொழிலைப் புதுமைப்படுத்துவதற்குத் தம் பங்கினை ஆற்றுகின்றன.

மீன்களைப் பிடித்துக் கரை சேர்க்கும் அளவை உயர்த்துதல் ; மீன்களைப் பக்குவப் படுத்திப் பாதுகாத்தலும், விற்பனையும் ; நவீன மீன்பிடி படகுகள் பிடித்த மீன்களைக் கரைசேர்க்கும் வசதியும் ; படகுத் துறையில் நிறுத்தும் வசதியும் ; மீன்களைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல சாலைகள், செய்தித் தொடர்பு போக்கு வரத்து வசதிகளை அமைத்தலும், மீனவர்களுக்குப் பயிற்சியும், கல்வியும் புகட்டி, சமூகத்தில் அவர்களது நிலையை உயர்த்துதலும் ஆகும்.

The primary object of the Fisheries Department is to modernise the fishing industry on scientific lines keeping pace with the other developing and developed countries. The efforts to modernise the industry commenced from the beginning of the Five Year Plans and most of the investment by the department has been spent only towards modernisation, such as introduction of mechanised fishing boats application of latest science in fish breeding and stocking, conducting research into the various aspects of fisheries and the problems of the industry. The following are the specific schemes which lay emphasis on modernisation.

(1) Introduction of mechanised fishing boats ;

(2) Introduction of modern gear ;

(3) Training of fishermen to learn mechanised fishing and using modern gear and scientific apparatus ;

(4) Fish breeding and stocking; and

(5) Processing and marketing.

The other schemes implemented by the Department are ancillary and they also contribute towards the object of modernisation in order to increase the fish landings, fish preservation and marketing, landing berthing facilities for modern fishing crafts, roads and communication for fish to reach the markets and uplifting the fishermen educationally and socially.